# ஆகஸ்ட்– 29 –புதன்

## புனித திருமுழுக்கு யோவானின் சிரச்சேதம்

**ஆண்டவருக்கு அஞ்சி அவர் வழிகளில் நடப்போர் பேறுபெற்றோர்! திபா. 128:1**

**முதல் வாசகம் : 2தெசலோனிக்கேயர் 3:6 –10,16–18**

அன்பர்களே! எங்களிடமிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட முறைமையின்படி ஒழுகாமல் சோம்பித்திரியும் எல்லா சகோதரர் சகோதரிகளிடமிருந்தும் விலகி நில்லுங்கள் என, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கட்டளையிடுகிறோம். எங்களைப்போல் ஒழுகுவது எப்படி என்பது உங்களுக்கே தெரியும். ஏனெனில், உங்களிடையே இருந்தபோது நாங்கள் சோம்பித்திரியவில்லை.எவரிடமும் இலவசமாக நாங்கள் உணவருந்தவில்லை. மாறாக, உங்களுள் எவருக்கும் சுமையாய் இராதபடி, இராப்பகலாய்ப் பாடுபட்டு உழைத்தோம்.எங்களுக்கு வேண்டியதைப் பெற உரிமை இல்லை என்பதால் அல்ல, மாறாக, நீங்களும் எங்களைப் போல நடப்பதற்காக உங்களுக்கு முன்மாதிரி காட்டவே இவ்வாறு செய்தோம்."உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது" என்று நாங்கள் உங்களிடையே இருந்தபோதே உங்களுக்குக் கட்டளை கொடுத்திருந்தோம். அமைதியை அருளும் ஆண்டவர்தாமே எப்பொழுதும் எல்லா வகையிலும் உங்களுக்கு அமைதி அளிப்பாராக! ஆண்டவர் உங்கள் அனைவரோடும் இருப்பாராக!இவ்வாழ்த்தைப் பவுலாகிய நான் என் கைப்பட எழுதுகிறேன். நான் எழுதும் திருமுகம் ஒவ்வொன்றுக்கும் இதுவே அடையாளம். இதுவே நான் எழுதும் முறை.நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருள் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

**பதில்பாடல் :** என் வாய் உமது நீதியையும் மீட்பையும்
எடுத்துரைக்கும்.

**நற்செய்தி : மாற்கு6 : 17 – 29**

அக்காலத்தில் ஏரோது, தன் சகோதரனான பிலிப்பின் மனைவி ஏரோதியாவை மனைவியாக்கிக் கொண்டிருந்தான் அவள் பொருட்டு ஆளனுப்பி யோவானைப் பிடித்துக்கட்டிச் சிறையில் அடைத்திருந்தான். ஏனெனில் யோவான் ஏரோதிடம், "உம் சகோதரர் மனைவியை நீர் வைத்திருப்பது முறை அல்ல" எனச் சொல்லிவந்தார்.அப்போது ஏரோதியா அவர்மீது காழ்ப்புணர்வு கொண்டு, அவரைக் கொலைசெய்ய விரும்பினாள் ஆனால் அவளால் இயலவில்லை.ஏனெனில் யோவான் நேர்மையும் தூய்மையும் உள்ளவர் என்பதை ஏரோது அறிந்து அஞ்சி அவருக்குப் பாதுகாப்பு அளித்து வந்தான். அவர் சொல்லைக் கேட்டு மிகக் குழப்பமுற்றபோதிலும், அவருக்கு மனமுவந்து செவிசாய்த்தான். ஒருநாள் ஏரோதியாவுக்கு நல்ல வாய்ப்பு ஒன்று கிடைத்தது. ஏரோது தன் பிறந்தநாளில் அரசவையினருக்கும், ஆயிரத்தவர் தலைவர்களுக்கும் கலிலேய முதன்மைக் குடிமக்களுக்கும் ஒருவிருந்துபடைத்தான்.அப்போது ஏரோதியாவின் மகள் உள்ளே வந்து நடனமாடி ஏரோதையும் விருந்தினரையும் அகமகிழச் செய்தாள். அரசன் அச்சிறுமியிடம், "உனக்கு என்ன வேண்டுமானாலும் கேள், தருகிறேன்" என்றான். "நீ என்னிடம் எதுகேட்டாலும், ஏன் என் அரசில் பாதியையே கேட்டாலும் உனக்குத்தருகிறேன்" என்றும் ஆணையிட்டுக் கூறினான்.அவள் வெளியே சென்று, "நான் என்ன கேட்கலாம் ?" என்று தன்தாயை வினவினாள். அவள், "திருமுழுக்கு யோவானின் தலையைக் கேள்" என்றாள்.உடனே சிறுமி அரசனிடம் விரைந்து வந்து, "திருமுழுக்கு யோவானின் தலையை ஒருதட்டில் வைத்து இப்போதே எனக்குக்கொடும்" என்றுகேட்டாள். இதைக்கேட்ட அரசன் மிகவருந்தினான். ஆனாலும் விருந்தினர்முன் தான் ஆணையிட்டதால் அவளுக்கு அதை மறுக்கவிரும்பவில்லை. உடனே அரசன் ஒருகாவலனை அனுப்பி யோவானுடைய தலையைக் கொண்டுவருமாறு பணித்தான். அவன் சென்று சிறையில் அவருடைய தலையை வெட்டி, அதை ஒருதட்டில் கொண்டுவந்து அச்சிறுமியிடம் கொடுக்க, அவளும் அதைத் தன் தாயிடம் கொடுத்தாள்.இதைக் கேள்வியுற்ற யோவானுடைய சீடர்கள் வந்து அவருடைய உடலை எடுத்துச்சென்று ஒரு கல்லறையில் வைத்தார்கள்.

**தியானம் :** ஆதியிலே மனிதனாகப் படைக்கப்பட்ட ஆதாம் கட்டிக்கொண்ட பாவத்தின் நிமித்தம் நெற்றி வியர்வை சிந்தி பாடுபட்டு உழைக்க வேண்டும் என்று இறைவன் அவனுக்கு கட்டளையிட்டார். இன்றைய முதல் வாசகத்திலும் கூட உழைப்பின் முக்கியத்தவத்தையும் உழைக்க மனமில்லாதவன் உண்ணலாகாது என்பதை தெளிவு படுத்துவதன் மூலம் யாவரும் உழைக்க வேண்டும் என்பதை வெளிப்படுத்துகிறார். இங்கு உழைத்தல் என்பது எமது அன்றாட வாழ்விற்கு உழைக்கவேண்டும் என்றும் கிறிஸ்து இயேசுவின் பணிக்காகவும் உழைக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்துகின்றது. இங்கு கூறப்பட்டதில் நாங்கள் எதற்காக உழைகின்றோம் என்று எங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் பணம் இருந்தால் தான் நான் முன்னேற முடியும் என்று கூறிக்கொண்டு கடவுளுக்கு முன்னுரிமை கொடுக்காதவர்களாக நேரம் காலம் பார்க்காது வேலை வேலை என்று வாழ்ந்து கொணடிருக்கிறோம். (நிலையான செல்வத்தை விட்டுவிட்டு நிலையற்ற செல்வத்தை தேடிக்கொண்டிருக்கிறோம்). எவ்வாறாக இருந்தாலும் கூட இறைவனுக்கு முன்னுரிமை கொடுத்து அவருக்கு அஞ்சி வாழும் பொழுது நாங்கள் உழைபபின் பயனை உண்பீர் என்று தி.பா. 128:2ல் பார்க்கின்றோம். பணத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்தான் ஆனால் இறைவனையே மறந்து விடக்கூடாது. ஆம் இறைவன் ஒவ்வொருவருக்கேற்ற வகையில் பணிகளைக் கொடுத்திருக்கிறார் என்பதை முதலில் கண்டு கொள்வோம். அவற்றிற்கு முதலிடம் கொடுத்துஅவருக்காகஉழைப்போம்.